# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# Performance Report
# 2017

## කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුව
## முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்
## DEPARTMENT OF MANAGEMENT AUDIT


මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
මහලේකම් කාර්යාලය
කොළඹ 01.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
செயலகம்
கொழும்பு 01.

Ministry of Finance and Mass Media
The Secretariat
Colombo 01.

*அரசநிதிச் சுற்றறிக்கை இலக்கம் 402 இல் தரப்பட்டுள்ளஅறிவுறுத்தல்களுக்குஏற்ப, இலங்கைப் பாராளுமன்றத்திற்குசமர்ப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது.*

**முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்**

**நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு**

**செயலகம்**

**கொழும்பு 01.**

# உள்ளடக்கம்

பக்கம்


01. திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி, குறிக்கோள் மற்றும் பணிகள் 01

1.1. நோக்கு 01

1.2. செயற்பணி 01

1.3. குறிக்கோள் 01

1.4. பணிகள் 02

02. நிதி நிருவாகம் 03

03. பௌதீக செயலாற்றுகை 05

3.1 அரச துறையிலுள்ள உள்ளகக் கணக்காய்வு அலுவலர்களின் ஆற்றலை விருத்தி செய்தல் 05

3.2 முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக்களுக்கான பிரதிநிதித்துவத்தின் மூலம் அரச துறையின் உள்ளகக் கணக்காய்வினை பலப்படுத்தல் 07

3.3 அபிவிருத்திக் கருத்திட்டங்களில் முகாமைத்துவக் கணக்காய்வை வலுவூட்டுதல் 09

3.4 விசேட விசாரணை மற்றும் கணக்காய்வுப் பணிகள் 10

3.5 அரச கணக்குகள் பற்றிய செயற்குழுவுக்கு பொதுத் திறைசேரியின் அறிக்கையை சமர்ப்பித்தல் 14

04. மனிதவள முகாமைத்துவம் மற்றும் பொது நிருவாகம் 15

4.1 திணைக்களத்தின் அமைப்புரீதியான கட்டமைப்பு 15

4.2 2017.12.31 ஆம் திகதியில் பதவியணி 16

4.3 2017ஆம் ஆண்டில் பயிற்சி மற்றும் திறன்விருத்தி நடவடிக்கைகள் 17

4.3.1 2017 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பயிற்சிகள் 17

4.3.2 2017 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் பயிற்சிகள் 19

4.3.3 2018 ஆம் ஆண்டுக்கான உத்தேச செயற்பாடுகள் 20

# 01. முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின், நோக்கு, செயற்பணி, குறிக்கோள் மற்றும் பணிகள்

## 1.1 நோக்கு

அதி உயர் செயலாற்றுகையையும் பொறுப்பையும் கொண்ட அரச சேவையொன்றின் பொருட்டு பெறுமதியைச் சேர்க்கின்ற மிகச் சிறந்த முகாமைத்துவ கணக்காய்வுப் பங்குதாரர் நிலையை அடைதல்.

## 1.2 செயற்பணி

முகாமைத்துவக் கணக்காய்வினூடாக அரச சேவையின் பொறுப்புக்களை விருத்தி செய்வதற்கும் பெறுமதியைச் சேர்ப்பதற்கும் சுயாதீனமாக நோக்கத்தை அடைந்துகொள்வதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆலோசனை ரீதியான சேவைகளை வழங்குதல்.

## 1.3 குறிக்கோள்

1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்தல்.

2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் மூலம் உள்ளகக் கணக்காய்விற்கு வலுவூட்டல்.

3. முகாமைத்துவ கணக்காய்வுப் பணிகளை விருத்தி செய்யும் பொருட்டு தேவையான வழிகாட்டல்களை அறிமுகப்படுத்துதல்.

4. அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முகாமைத்துவ கணக்காய்வு செயற்பாடுகளுக்கு வலுவூட்டல்.

5. விசேட விசாரணைப் பணிகள் மூலம் அரச துறையில் ஏற்படுகின்ற மற்றும் ஏற்படக் கூடிய மோசடிகளை கண்டுபிடித்தல் மற்றும் அவ்வாறான நிலைகள், சம்பவங்களைத் தடுப்பதற்கான சிபாரிசுகள் மற்றும் நிவாரணத் திட்டங்களை பரிந்துரை செய்தல்.

## 1.4 பணிகள்

2008.01.25 ஆம் திகதிய 08/0200/306/012 ஆம் இலக்கத்தைக் கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம் திறைசேரியின் திணைக்களமொன்றாக 2008.02.01 ஆம் திகதியன்று தாபிக்கப்பட்டது. பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர் களுக்கும் திறைசேரியிடமிருந்து கிடைக்கும் உதவிகளை தொடர்ந்தும் பலப்படுத்துவது அதன் நோக்கமாகவுள்ள அதேவேளையில், அதன் பிரகாரம் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள சுயாதீன நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளுக்கு வழிகாட்டுவதும், அதன் மூலம் அந்த நடவடிக்கைகளை பலப்படுத்துவதும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் இந்தத் திணைக்களம் 2017.06.09 ஆம் திகதிய 2022/34 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் சனாதிபதி செயலகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள அதேவேளையில், உள்ளகக் கணக்காய்வு விடயப் பரப்பிற்கு உரியதாக ஒப்படைக்கப்படுகின்ற கடமை நடவடிக்கைகளும் இதன்போது மேற்கொள்ளப்படுகின்றன.

### முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள்:

1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வின் தரத்தையும் செயற்திறனையும் மேம்படுத்துவதற்கான அடிப்படை நிறுவனமாகத் தொழிற்படுதல்.

2. அமைச்சுக்கள், விசேட செலவின அலகுகள் மற்றும் விசேட திணைக்களங்கள் ஆகியவற்றின் கீழுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்களை முகாமைத்துவ கணக்காய்வுக்கு உட்படுத்துதல்.

3. உள்ளகக் கணக்காய்வுக்கான வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தல்.

4. உள்ளகக் கணக்காய்வு அலகுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.

5. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வாளர்களின் உள்ளகக் கணக்காய்வுத் திறன்களை விருத்தி செய்தல்.

6. அமைச்சுக்கள், விசேட செலவின அலகுகளின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களைப் பிரதிநிதித்தவப்படுத்துதலும், வழிகாட்டுதலும்.

7. விசேட விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

8. ஆரச கணக்ககள் செயற்குழுக் கூட்டங்களில் பங்குபற்றுதலும் திறைசேரி அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பித்தலும்.

## 02. நிதி நிருவாகம்

2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மூலம் செலவினத் தலைப்பு இலக்கம் 324, நிகழ்ச்சித் திட்ட இலக்கம் 01 மற்றும் கருத்திட்ட இலக்கம் 01 இன் கீழ் இந்தத் திணைக்களத்திற்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

2017.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு அந்த ஏற்பாடுகளை செலவு செய்த விதம் பற்றி கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| செலவின விபரம் | திருத்தப்பட்ட மதிப்பீடு ஒதுக்கீடு (ரூபா) | மேலதிக ஏற்பாட்டு ஒதுக்கீடு (ரூபா) | நி.ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல் (ரூபா) | உண்மைச் செலவினம் (ரூபா) | மீதி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம் (அ)** | **43,834,000** | **3,077,000** | **617,000 -617,000** | **43,574,687** | **3,336,313** |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 33,200,000 | 0 | | 30,490,288 | 2,709,712 |
| ஏனைய செலவினம் | 10,634,000 | 3,077,000 | | 13,084,398 | 626,602 |
| **உப மொத்தம்** | **43,834,000** | **3,077,000** | **0** | **43,574,687** | **3,336,313** |
| **மூலதனச் செலவினம் (ஆ)** | **4,900,000** | **-** | | **2,338,778** | **2,561,222** |
| | | | | | |
| 2001 கட்டடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 2,000,000 | - | | 28,500 | 1,971,500 |
| 2002 இயந்திரங்கள் மற்றும் இயந்திர சாதனங்களைப் பழுதுபார்த்தல் | 200,000 | - | | 69,950 | 130,050 |
| 2102 தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 400,000 | - | | 175,215 | 224,785 |
| 2103 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 1,700,000 | - | | 1,505,101 | 194,899 |
| 2401 திறன் விருத்தி | 600,000 | - | | 560,012 | 39,988 |
| **முழு மொத்தம் (அ) + (ஆ)** | **48,734,000** | **3,077,000** | **0** | **45,913,465** | **5,897,535** |






## அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கு

2017 ஆம் ஆண்டுக்காக இந்தத் திணைக்களத்தின் அரசாங்க அலுவலர்களின் அங்கீகரிக்கப்பட்ட முற்பணம் பீ கணக்கின் விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| விபரம் | அனுமதிக்கப்பட்ட எல்லை (ரூ.) | உண்மைச் செலவினம் (ரூ.) |
|---|---|---|
| உச்ச செலவின எல்லை | 4,500,000 | 4,102,837.80 |
| ஆகக் குறைந்த கிடைப்பனவு எல்லை | 2,000,000 | 2,650,586.58 |
| ஆகக் கூடிய வரவு மீதி எல்லை | 10,000,000 | 7,920,448.34 |

# 03. பௌதீக செயலாற்றுகை

## 3.1 உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் திறன்களை விருத்தி செய்தல்

உள்ளகக் கணக்காய்வின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக அமைச்சுக்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றில் பணியாற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் அந்தப் பிரிவுகளிலுள்ள பொது முகாமைத்தவ உதவியாளர்களின் தொழில்சார் அறிவினை மேம்படுத்துவதற்காகவும் கணக்காய்வு சம்பந்தமான காலத்திற்கேற்ற தகவல்களை வழங்குவதற்காகவும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களமானது தொடர்ச்சியாக அவர்களுக்கு ஒத்துழைத்து வருகின்றது.

மேற்குறிப்பிட்ட நோக்கத்துடன் 2017.12.31 ஆம் திகதி வரை இந்தத் திணைக்களத்தினால் பின்வரும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

| இடம்பெற்ற திகதி | செயலமர்வின் தலைப்பு | பங்குபற்றியோர் |
|---|---|---|
| 2017.03.03/04 | பதவியினருக்கான ஊக்குவிப்பு செயலமர்வு | முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சகல பதவியினர்களும் |
| 2017.05.09 | உள்ளகக் கணக்காய்வுக்கான சர்வதேச தொழில்ரீதியான வழிகாட்டல் வரைசட்டகம்<br><br>கணக்காய்வாளர் அதிபதியின் பொறுப்புக்களும் உள்ளகக் கணக்காய்வும் | நிதி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்களில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் சேவையில் ஈடுபட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பொது முகாமைத்தவ உதவியாளர்களும். |
| 2017.06.07 | கணக்காய்வாளர் அதிபதியின் அதிகாரங்களும் கடமைகளும்<br><br>CIGAS மற்றும் GPS இற்கான உள்ளகக் கணக்காய்வும் நிறுவன நடைமுறைகளும் | 16 அமைச்சுக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளில் சேவையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பொது முகாமைத்தவ உதவியாளர்களும். |
| 2017.06.13 | தகவலறியும் சட்டம் மற்றும் அதன் கீழுள்ள கணக்காய்வாளர்களின் பொறுப்புக்களும் | அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் விசேட செலவின அலகுகளின் உள்ளகக் கணக்காய்வாளர்கள் |
| 2017.07.05 | கருத்திட்டச் செயற்பாட்டு அலகுக் கணக்காய்வு | அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் விசேட செலவின அலகுகளின் உள்ளகக் கணக்காய்வாளர்கள் |
| 2017.07.10 | கணக்காய்வாளர் அல்லாத உத்தியோகத்தர்களும் உள்ளகக் கணக்காய்வின் முக்கியத்துவமும் | அமைச்சுக்களில் கணக்காய்வு மற்றும் கணக்கு நடவடிக்கைகளில் தொடர்புபடாத நிறைவேற்றுத் தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் |

| | | |
|---|---|---|
| 2017.07.19 | உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு<br><br>கணக்காய்வாளர் அதிபதியின் பொறுப்புக்களும் உள்ளகக் கணக்காய்வும் | 12 அமைச்சுக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளில் சேவையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பொது முகாமைத்தவ உதவியாளர்களும். |
| 2017.08.30 | CIGAS மற்றும் GPS பற்றிய கணக்காய்வு<br><br>உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் | 09 அமைச்சுக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளில் சேவையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பொது முகாமைத்தவ உதவியாளர்களும். |
| 2017.10.03 | CIGAS மற்றும் GPS பற்றிய கணக்காய்வு<br><br>உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் | 05 மாவட்டச் செயலகங்களையும் 04 திணைக்களங்களையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளில் சேவையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பொது முகாமைத்தவ உதவியாளர்களும். |
| 2017.10.12 | CIGAS மற்றும் GPS பற்றிய கணக்காய்வு<br><br>உள்ளகக் கணக்காய்வுக் கோட்பாடுகளும் பணிகளும் | 12 அமைச்சுக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளில் சேவையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பொது முகாமைத்தவ உதவியாளர்களும். |
| 2017.10.30 | CIGAS மற்றும் GPS பற்றிய கணக்காய்வு<br><br>உள்ளகக் கணக்காய்வுக் கோட்பாடுகளும் பணிகளும் | 03 அமைச்சுக்கள், 10 திணைக்களங்கள் மற்றும் 01 மாவட்டச் செயலகம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளில் சேவையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பொது முகாமைத்தவ உதவியாளர்களும். |
| 2017.12.11 - 2017.12.12 | பொது முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருக்கான உள்ளகக் கணக்காய்வு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குரிய சகல மாவட்டச் செயலகங்களினதும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளில் சேவையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பொது முகாமைத்தவ உதவியாளர் சேவையிலுள்ள பதவியினர்களும். |
| 2017.12.18 - 2017.12.19 | கணக்காய்வுத் திட்டத்தை தயாரிப்பது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | சனாதிபதி செயலகம், பிரதமரின் அலுவலகம், அமைச்சுக்கள், ஆணைக்குழுக்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் திணைக்களங்கள் ஆகியவற்றிலுள்ள பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்கள் |

மேலும் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் உதவி நிகழ்ச்சித் திட்டங்களின் (USAID) கீழ் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களுக்காக பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

| இடம்பெற்ற திகதி | செயலமர்வின் தலைப்பு | பங்குபற்றியோர் |
|---|---|---|
| 2017.06.27 - 2017.06.29 | சட்டக் கணக்காய்வு (Forensic Audit) | அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் விசேட செலவின அலகுகளின் உள்ளகக் கணக்காய்வாளர்கள் |
| 2017.08.14 - 2017.08.16 | தகவல் தொழில்நுட்பத் தொகுதிக் கணக்காய்வு | அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் விசேட செலவின அலகுகளின் உள்ளகக் கணக்காய்வாளர்கள் |
| 2017.10.16 - 2017.10.19 | பெறுகைக் கணக்காய்வு | அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் விசேட செலவின அலகுகளின் உள்ளகக் கணக்காய்வாளர்கள் |
| 2017.11-21- 2017.11.23 | செயலாற்றுகைக் கணக்காய்வு | சனாதிபதி செயலகம், பிரதமரின் அலுவலகம், அமைச்சுக்கள், ஆணைக்குழுக்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் திணைக்களங்கள் ஆகியவற்றிலுள்ள பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர்கள் |

## 3.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக்களுக்கான திறைசேரியின் பிரதிநிதித்துவத்தின் மூலம் அரச துறையின் உள்ளகக் கணக்காய்வை பலப்படுத்தல்

அரசாங்க அமைச்சுக்கள், விசேட திணைக்களங்கள் விசேட செலவின அலகுகள் மற்றும் மாவட்டச் செயலகங்களிலுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுக்காக முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் பிரதிநிதிகள் மற்றும் குழுவின் அங்கத்தவர் என்ற வகையில் இந்தத் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றுகின்றனர். அந்த அலுவலர்களினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை வினைத்திறனுடையதாக தொடர்ச்சியாக நடாத்துவது பற்றிய வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை பலப்படுத்துதல், உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் அரசாங்கத்தின் கணக்காய்வு விசாரணைகளின் மூலம் எடுத்துக் காட்டப்படுகின்ற விசேட விடயங்கள்

சம்பந்தமான தீர்மானங்களை எடுப்பதற்கும் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் குழுவின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவது பற்றிய பின்னூட்டல்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் அரசாங்கத் துறையின் முகாமைத்துவ நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கு பங்களிப்பை வழங்கியுள்ளது.

முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2017.12.31 ஆம் திகதியில் 50 அமைச்சுக்களில் நடாத்தப்பட்ட 191 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்கும், 06 விசேட திணைக்களங்களில் நடாத்தப்பட்ட 30 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்கும், இலங்கைப் பாராளுமன்றம், சனாதிபதி செயலகம், பிரதமரின் அலுவலகம், அரசாங்க சேவை ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு மற்றும் தேர்தல் ஆணைக்குழு போன்ற விசேட செலவின அலகுகளின் 21 முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கும், 14 மாவட்டச் செயலகங்களில் 19 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்கும், இலங்கைக் காப்புறுதிச் சபையின் 01 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்திற்கும் இந்தத் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர்.

### 3.2.1 அரச துறையின் உள்ளகக் கணக்காய்வின் செயலாற்றுகையை மேம்படுத்தல்

அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் உள்ளகக் கணக்காய்வை முறையாகப் பேணும் நோக்கில் உள்ளகக் கணக்காய்வு அலகுகள் ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ளன. அந்த உள்ளகக் கணக்காய்வு அலகுகளில் உற்பத்தித்திறன் மற்றும் செயற்திறன் என்பவற்றின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு என்பவற்றுக்காக உள்ளகக் கணக்காய்வு அலகுகளை உன்னிப்பாக மேற்பார்வை செய்வது காலத்தின் தேவையாகும் என அடையாளங்காணப்பட்டுள்ள அதேவேளையில், அதன் பிரகாரம், அதன் முதலாவது கட்டத்தின் கீழ் அமைச்சுக்களின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் மீளாய்வு 2017 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் இந்தத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் கீழ் 45 அமைச்சுக்களின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் மீளாய்வு மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில், அதன் மூலம் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

I. சகல அமைச்சுக்களின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் ஒரே முறைமையின் கீழ் மேற்கொள்ளக்கூடியதாக இருந்தமை.
II. இந்தத் திணைக்களத்திலும் சகல அமைச்சுக்களிலும் உள்ள உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளுக்கிடையில் கூட்டிணைப்பு நடவடிக்கைகளை அதிகரித்தல்.
III. கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது உள்ளகக் கணக்காய்வாளர்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படுகின்ற பிரச்சினைகளையும் தடைகளையும் சரியாக அடையாளங் காணக்கூடியதாக இருக்கின்றமை.
IV. உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை உரிய விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்களை வழங்கக்கூடியதாக இருந்நதமை.

இந்த மீளாய்வின்போது உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தலும் இணைந்த கணக்காய்வு அறிக்கையைச் சமர்ப்பித்தலும், கணக்காய்வு மற்றும் முகாமத்துவக் குழுக்கூட்டங்களை நடாத்துதல், விசேட விசாரணைகளை நடாத்துதல், உள்ளக நிருவாகம் மற்றும் அரச கணக்கு செயற்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் போன்ற பிரதான தலைப்புகளினூடாக உள்ளகக் கணக்காய்வின் செயலாற்றுகை மீளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் அதன் மூலம் பின்வரும் குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அ) ஒருசில உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளில் உதவிப் பணியாட்களுக்காக அனுமதிக்கப்பட்ட பதவியணியொன்று இல்லாமை மற்றும் பதவியணிக்காக பௌதீக வசதிகள் போதுமான அளவு இல்லாமை.

ஆ) ஒருசில துறைகள் தொடர்பில் தொழில்நுட்ப விடய அறிவு போதுமான அளவில் இல்லாமை.

இ) உள்ளகக் கணக்காய்வு கடமை நடவடிக்கைகளுக்குப் புறம்பாக ஏனைய கடமை நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றமை மற்றும் வெளிவாரியான தாக்கங்கள் ஏற்படுகின்றமை.

ஈ) கணக்காய்வாளரின் கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில்களை வழங்குவது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றமை.

உ) கணக்காய்வு தொடர்பில் உயர் முகாமைத்துவத்திலுள்ள மனப்பாங்கு சாதகமாக இல்லாமை.

ஊ) அமைச்சின்கீழுள்ள ஒருசில அரசாங்க நிறுவனங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்கு பிரதான உள்ளகக் கணக்காய்வாளரை அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை.

இந்த மீளாய்வுக் கூட்டங்களின் மூலம் உள்ளகக் கணக்காய்வு அலகுகளின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்குப் பங்களிப்புச் செய்யப்படுகின்றபடியினால் 2018 ஆம் ஆண்டிலிருந்து அமைச்சுக்களிலும் அதேபோன்று திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களிலும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கை மீளாய்வுகளை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.3 அபிவிருத்திக் கருத்திட்டங்களில் முகாமைத்துவ கணக்காய்வை பலப்படுத்தல்

சகல அமைச்சுக்களின் கீழும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களிலும் உள்ளக நிருவாக நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்காக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 10 பில்லியன் டொலர்களுக்கு மேற்பட்ட வெளிநாட்டு உதவியை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக உள்ளகக் கணக்காய்வாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அதிகாரமளித்து வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் கீழ் சுமார் 12 அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு ஏற்கனவே உள்ளகக் கணக்காய்வாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அதேவேளையில் 13 கருத்திட்டங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று மேற்சொன்ன உள்ளகக் கணக்காய்வாளர்களின் பணிகளையும் பொறுப்புக்களையும் அறிமுகப்படுத்தி 01/2017 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக தொடர்ச்சியாக அபிவிருத்திக் கருத்திட்டங்களில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து அவற்றின் பலவீனங்களைக் குறைத்துக்கொள்வதற்குத் தேவையான தூண்டுதல் இந்த அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான பின்வரும் விசேட விசாரணை நடவடிக்கைகளும் தற்போது இந்தத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- கொழும்பு தெற்கு துறைமுக அபிவிருத்தி கருத்திட்டத்தில் வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தியமை பற்றிய விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரின் வேண்டுகோளின் பிரகாரம் அந்த அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற சமூக பாதுகாப்பு வலை கருத்திட்டம் தொடர்பான முகாமைத்துவ கணக்காய்வு இந்தத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 3.4 விசேட விசாரணை மற்றும் கணக்காய்வுப் பணிகள்

நிதி அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்களுக்கும் அதேபோன்று நிதி அமைச்சின் செயலாளருக்கும் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளை நிதி அமைச்சின் செயலாளரின் பணிப்பின் பேரில் பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றது. அவ்வாறு அனுப்பப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும் விசாரணை அறிக்கைகள் நிதி அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக குறித்த அமைச்சின் செயலாளருக்கு அல்லது குறித்த நிறுவனத்தின் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், முறைப்பாட்டின் விசாரணைகளின் மூலம் வெளியாகும் குறைபாடுகள் மற்றும் முறைகேடுகள் என்பன மீண்டும் ஏற்படாதவாறு தடுப்பதே இதன் நோக்கமாகும்.

2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் 19 விசாரணை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ள அதேவேளையில், இந்தக் காலப் பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட 21 முறைப்பாடுகளுக்காக தொடர்ந்தும் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2017.12.31 ஆம் திகதியில் முடிவுறுத்தப்பட்டுள்ள விசாரணைகள்**

| தொடர் இல. | நிறுவனம் | விசாரணை |
|---|---|---|
| 1 | ஜிம்கானா சங்கம் | மதுபான விற்பனை அனுமதிப் பத்திரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியமை (Misused of Liquor License) |
| 2 | மலையக புதிய கிராம உட்கட்டமைப்பு வசதிகள் சமூக அபிவிருத்தி அமைச்சு | சௌம்யமூர்த்தி தொண்டமான் மன்றத்தில் இடம்பெற்றுள்ள ஊழல்கள் |
| 3 | இல. 05 தேவாலய ஒழுங்கை - கோட்டை | தேவாலய ஒழுங்கையில் அத்தமீறிய நிர்மாணம் சம்பந்தமான |
| 4 | அவிசாவலை மக்கள் வங்கி | ஈடு வைக்கப்பட்ட தங்கத்தை மோசடியான முறையில் தொலைத்தமை |
| 5 | புகையிரதத் திணைக்களம் | அரசாங்கத்தின் பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தியமை |
| 6 | இலங்கை சுங்கத் திணைக்களம் | திணைக்களத்தின் பரிசத் தொகையை செலுத்தாமை |
| 7 | தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் | திணைக்களத்தின் தற்போதைய நிருவாகம் சம்பந்தமானது. |
| 8 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | அரசாங்க நிதியை வினைத்திறனின்றிச் செலவிட்டமை |
| 9 | நுவரெலியா பொலிஸ் அதிகாரியின் அலுவலகம் | கணக்காளர் நிதி மோசடி செய்தமை |
| 10 | தேசிய காப்பறுதி நிதியம் | நிதியத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமானது. |
| 11 | அரசாங்க உத்தியோகத்தர்களின் நலன்புரிச் சங்கம் | 107 ஆவது பொதுக்கூட்டம் மற்றும் அங்கத்தவர் தெரிவு சம்பந்தமானது. |
| 12 | நிதி அமைச்சு | நிதி அமைச்சின் KU-0392 ஆம் இலக்க வாகனத்தினை முறைகேடாகப் பயன்படுத்தியமை சம்பந்தமானது. |
| 13 | அபிவிருத்தி லொத்தர் சபை | புதிய பணியாட்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போதும் உள்ளகப் பதவியுயர்களின் போதும் இடம்பெற்ற முறைகேடுகள் |
| 14 | ஊழல்களுக்கு எதிரான முன்னணி | உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தான உத்தியோகத்தர்கள் ஒதுக்கத்திலுள்ள வாகனங்களைப் பயன்படுத்துகின்றமை |

| | | |
|---|---|---|
| 15 | திரு. சமன்த ருக்ஷான் ஜயவிக்ரம - மாத்தறை | மோசடியான முறையில் ஓய்வூதியத்தைப் பெறுவது சம்பந்தமானது. |
| 16 | விலை மதிப்பீட்டுத் திணைக்களம் | இலங்கை விலைமதிப்பீட்டுத் நிறுவனத்தின் உத்தேச யாப்புத் திருத்த செயற்பாடுகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தியமை |
| 17 | இலங்கை தென் கிழக்குப் பல்கலைக் கழகம் | இலங்கை தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றுள்ள ஊழல்கள் (இலங்கை தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் கருத்தரங்குகள் தொடர்பான விசேட் விசாரணை) |
| 18 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | பொய்க் குற்றச்சாட்டின் அடிப்படையில் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்தமை மற்றும் பேருவலைக்கு இடமாற்றம் செய்தமை |
| 19 | துறைமுகங்கள் அதிகாரசபை | கொழும்புத் துறைமுகத்தின் எடிசன் தீர்வை வரியற்ற கடைத்தொகுதி |

## 2017.12.31 ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்று தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற விசாரணைகள்

| தொடர் இல. | நிறுவனம் | விடயம் |
|---|---|---|
| 1 | சுங்கத் திணைக்களம் | 03 கிலோ கிராம் தங்கம் சம்பந்தமான விசாரணை |
| 2 | தபால் திணைக்களம் | நாட்டின் சகல தபால் பிரிவுகளிலும் உள்ள மோசடிகள் |
| 3 | தபால் திணைக்களம் | 1. மோசடியாக மேற்கொள்ளப்படுகின்ற அரசாங்க நிதி சூறையாடல்<br>2. அநுராதபுர தபால் நிலையத்தின் பலவீனமான நிர்வாகம்<br>3. பணத்தை முறைகேடாகப் பயன்படுத்த்தியமை |
| 4 | தேசிய விஞ்ஞான மன்றம் | அரசாங்க நிதியை முறைகேடாகப் பயன்படுத்துகின்றமை |
| 5 | லங்காபுத்ர வங்கி | லங்காபுத்ர வங்கியின் அம்பாந்தோட்டைக் கிளையில் இடம்பெற்றுள்ள நிதி மோசடி மற்றும் முறைகேடுகள் |
| 6 | தபால் திணைக்களம் - யாழ்ப்பாணம் | யாழ்ப்பாண தபால் அலுவலகத்திலுள்ள முறைகேடுகள் சம்பந்தமானது. |
| 7 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | விசாரணைப் பிரிவிலுள்ள சிரேட்ட உதவி ஆணையாளர் சம்பந்தமானது. |

| | | |
|---|---|---|
| 8 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | பதிவாளரின் ஊழல் மற்றும் மோசடி சம்பந்தமான விசாரணை |
| 9 | புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு | மோசடி நடவடிக்கைகள் |
| 10 | கொழும்புத் துறைமுக நிர்மாணக் கருத்திட்டம் | கருத்திட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட இயந்திரங்களையும் வாகனங்களையும் போலியான முறையில் விற்பனை செய்தமை சம்பந்தமான |
| 11 | இலங்கை மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனம் | பொது மக்களின் பணத்தைச் சூறையாடுகின்றமை/ முறைகேடாகப் பயன்படுத்துகின்றமை |
| 12 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | கேகாலை பிராந்திய இறைவரி அலுவலகத்தில் வருமானத்தைச் செலுத்தவுள்ள வியாபாரிகளின் கோப்புகளை பணத்தைப் பெற்றுக்கொண்டு நிறுவனத்திலிருந்து அகற்றுதல் |
| 13 | தனியார் சுகாதார கண்காணிப்பு சபை | பொதுமக்கள் நிதியை முறைகேடாகப் பயன்படுத்துகின்றமை மற்றும் வரிப்பணத்தைப் புறக்கணிக்கின்றமை சம்பந்தமான முறைப்பாடு |
| 14 | இலங்கை தர நிறுவனம் | உத்தியோகபூர்வ வாகன உரிமையில்லாத உத்தியோகத்தர்களினால் வாகனத்திற்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொண்டு மேற்கொள்கின்ற அரசாங்க நிதியின் முறைகேடான பயன்பாடு பற்றியது. |
| 15 | சுங்கத் திணைக்களம் - இலங்கை சுதந்திர தொழிலாளர் சங்கம் | நீதிமன்ற வழக்கு இலக்கம் -AR-82/2017/(B)193/(17)<br><br>சுங்கத் திணைக்கள கோப்பு இலக்கம் - CIB/INV/108/2016 |
| 16 | சுங்கத் திணைக்களம் | வாகனங்களின் குறைமதிப்பீடு |
| 17 | மதுவரித் திணைக்களம் | பிரதான மதுவரி பரிசோதகர் சம்பந்தமானது |
| 18 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | சட்டதிட்டங்களை மீறிச் செயற்படுகின்றமை |
| 19 | உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு | உரிய பெறுகை முறைகளின்றி திறைசேரியின் நிதியை முறைகேடாகப் பயன்படுத்துகின்றமை |
| 20 | கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவனம் | ஊழல், மோசடி மற்றும் அரசாங்க நிதியை முறைகேடாகப் பயன்படுத்துகின்றமை |
| 21 | நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு | மோசடி மற்றும் நிதியை முறைகேடாகப் பயன்படுத்துகின்றமை |

இந்த விசாரணை நடவடிக்கைகளை 2017 ஆம் ஆண்டினுள் முடிவுறுத்த முடியாமற்போனபோதிலும் அவற்றில் பெரும்பாலானவை இறுதிக் கட்டம் வரை முடிவுறுத்தப்பட்டுள்ளது.

2017.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு முடிவுறுத்தப்பட்டுள்ள விசேட கணக்காய்வு நடவடிக்கைகள்

1. சம்பளங்களைத் தயாரித்தல் மற்றும் கொடுப்பனவு ஆகியவற்றுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கணனி நிகழ்ச்சித்திட்டம் - தகவல்கள் மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்
2. நிதி அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களில் வெளிநாட்டுப் பயிற்சிகள் - நிதி அமைச்சு

2017.12.31 ஆம் திகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விசேட கணகாய்வு நடவடிக்கைகள்

1. மதுபான உற்பத்தி வர்த்தகத்திற்காக வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரம் சம்பந்தமான விசேட கணக்காய்வு
2. 2016 ஆம் ஆண்டில் குடியரசுக் கணக்குகளின் கணக்காய்வு செய்தல்

## 3.5 அரச கணக்குகள் பற்றி செயற்குழுவுக்கு பொதுத் திறைசேரியின் அறிக்கையை சமர்ப்பித்தல்

அரச கணக்குகள் பற்றிய செயற்குழுவினால் அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அந்தந்த நிறுவனங்களுக்குரிய பொதுத் திறைசேரியின் அறிக்கை அரச கணக்குகள் பற்றிய செயற்குழுவுக்கு சமர்ப்பிப்பதற்குமுகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதன் பிரகாரம் 2017.12.31 ஆம் திகதி வரையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை 49 ஆகும். இந்த செயற்குழுக் கூட்டங்களுக்கான இந்தத் திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் பங்களிப்பும் வழங்கப்பட்டுள்ளது.

## 04. மனித வள முகாமைத்துவம் மற்றும் பொது நிருவாகம்

### 4.1 2017.12.31 ஆம் திகதியில் திணைக்களத்தின் அமைப்புரீதியான கட்டமைப்பு




அ.ப.உ. – 6 சாரதி - 2

* பி. பொ மு. உ – பிரதான பொது முகாமைத்துவ உதவியாளர் * அ.உ.- அபிவிருத்தி உத்தியோகத்தர் * பொ.மு.உ. - பொது முகாமைத்துவ உதவியாளர்

## 4.2 பதவியினர்

2017.12.31 ஆம் திகதியில் பதவியினர்

| பதவி | பதவியணி | | |
|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | உண்மையான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
| பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | - |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | - |
| பணிப்பாளர் (இ.நி.சே.) | 01 | 00 | 01 |
| பணிப்பாளர் (இ.க.சே.) | 05 | 04 | 01 |
| பணிப்பாளர் (இ.தி.சே.) | 02 | 02 | - |
| உதவிப்/ பிரதிப் பணிப்பாளர் (இ.க.சே.) | 07 | 06 | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் / அபிவிருத்தி உதவியாளர் | 09 | 06 | 03 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | 14 | 11 | 03 |
| சாரதி | 07 | 02 | 05 |
| அலுவலகப் பணி உதவியாளர் | 06 | 06 | 00 |
| மொத்தம் | **53** | **39** | **14** |

## 4.3 2017 ஆம் ஆண்டினுள் பயிற்சி மற்றும் திறன் விருத்தி நடவடிக்கைகள்

### 4.3.1 2017 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்கள் (2017.01.01 முதல் 2017.12.31 வரை)

| தொடர் இல. | அலுவலரின் பெயர் | பதவி | குால எல்லை | பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | இடம்பெற்ற நாடு |
|---|---|---|---|---|---|
| 01 | திருமதி. எம்.ஏ.கே.பீ. விஜேவன்த | பணிப்பாளர் | 22.01.2017 - 29.01.2017 | Programme on Public Sector Leadership and Decision Making | சிங்கப்பூர் |
| 02 | திருமதி. பி.ரீ.என். மாலி | உதவிப் பணிப்பாளர் | 22.01.2017 - 29.01.2017 | Programme on Public Sector Leadership and Decision Making | சிங்கப்பூர் |
| 03 | திருமதி. கே.ஏ.எம். கபுருபண்டார | பிரதிப் பணிப்பாளர் | 13.02.2017 – 17.02.2017 | Programme on Strategic Human Resource Management | சிங்கப்பூர் |
| 04 | திரு. எஸ்.எம். தயாரத்ன | பணிப்பாளர் | 20.02.2017 – 26.02.2017 | Programme on Negotiation and Conflict Resolution | சிங்கப்பூர் |
| 05 | திரு. டீ.ஜீ.ஜீ.எஸ் தயானாத் | பணிப்பாளர் | 20.02.2017 – 26.02.2017 | Programme on Negotiation and Conflict Resolution | சிங்கப்பூர் |
| 06 | திருமதி. ஜே.எச். பிரனாந்து | பிரதிப் பணிப்பாளர் | 20.02.2017 – 26.02.2017 | Programme on Negotiation and Conflict Resolution | சிங்கப்பூர் |
| 07 | திரு. ஆர்.ஆர்.கே நகபிடிய | பணிப்பாளர் | 18.03.2017 - 27.03.2017 | Training program on Strengthening Public Policy Making Process | ஓச்டேலியா |
| 08 | திரு. எஸ்.எம். தயாரத்ன | பணிப்பாளர் | 17.03.2017 - 06.04.2017 | Seminar on Chinas Experience in Reform & Opening –up for Developing Countries | சீனா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 09 | திருமதி. கே.பீ.ஜீ.யு. காரியவசம் | உதவிப் பணிப்பாளர் | 09.04.2017 - 29.04.2017 | Programme on Public Audit Management | கொரியா |
| 10 | திருமதி. எம்.ஏ.கே.பீ. விஜேவந்த | பணிப்பாளர் | 15.05.2017 - 26.05.2017 | Seminar on Economic Cooperation for South Asian | சீனா |
| 11 | திருமதி. ஜே.எச். பிரனாந்து | பிரதிப் பணிப்பாளர் | 20.05.2017 - 06.06.2017 | Alcohol Distribution Management and Promotion for Countries along the Silk Road Economic Belt 2017 | சீனா |
| 12 | திருமதி. ஆர்.பி. கன்கேவல | பணிப்பாளர் | 31.05.2017 - 24.06.2017 | Seminar on Financial Service and Cooperation for Developing Countries | சீனா |
| 13 | திரு. ஏ.என். ஹுபுகல - | பணிப்பாளர் | 15.08.2017 - 26.08.2017 | Seminar on Financial Service for China Development Assistance Project for Asian Countries | சீனா |
| 14 | திரு. எம்.ஆர்.ஜீ.ஏ.பி. முத்துகுடே | பணிப்பாளர் | 15.08.2017 - 26.08.2017 | Seminar on Financial Service for China Development Assistance Project for Asian Countries | சீனா |
| 15 | திரு. ஏ.என். ஹுபுகல - | பணிப்பாளர் | 14.11.2017 – 26.11.2017 | 2nd Country Study tour of Diploma in Public Procurement and Contract Administration (Miloda) | ஐக்கிய இராச்சியம் |
| 16. | திருமதி. ஜே.எச். பிரனாந்து | பிரதிப் பணிப்பாளர் | 14.11.2017 – 26.11.2017 | 2nd Country Study tour of Diploma in Public Procurement and Contract Administration (Miloda) | ஐக்கிய இராச்சியம |

### 4.3.2 2017 ஆம் ஆண்டில் உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்கள்

| தொடர் இல. | பயிற்சி கற்கைநெறி / நிகழ்ச்சித் திட்டம் | இடம்பெற்ற நிறுவனம் | இடம்பெற்ற திகதி / நாட்கள் | பங்குபற்றிய அலுவலரின் பெயர் மற்றும் பதவி |
|---|---|---|---|---|
| 01 | Programme on Risk Based IT Auditing | இலங்கை மத்திய வங்கி<br>சீ.பீ.எஸ் நிறுவனம் | 2017.04.06 -07 | திருமதி. எம்.ஏ.கே.பீ. விஜேவன்த - பணிப்பாளர்<br>திரு. டப்ளியு. விமலசேன - பணிப்பாளர்<br>திரு. டீ.ஜீ.ஜீ.எஸ் தயானாத் - பணிப்பாளர்<br>திருமதி.கே.ஏ.எம். கபுருபண்டார - பிரதிப் பணிப்பாளர்<br>திரு. டப்ளியு.எம்.டீ. விஜேபண்டார - உதவிப் பணிப்பாளர் |
| 02 | Diploma in Public Procurement and Contract Administration (DIPPCA) | மிலோதா நிறுவனம் (Miloda) | 2017<br>கற்கைநெறியில் பயின்றுகொண்டிருக் கின்றனர் | திரு. ஏ.என். ஹபுகல - பணிப்பாளர்<br>திருமதி.ஜே.எச். பிரனாந்து - பிரதிப் பணிப்பாளர்<br>திருமதி. எம்.ஏ.கே.பீ. விஜேவன்த - பிரதிப் பணிப்பாளர்<br>திரு. எஸ்.எம்.தயாரத்ன - பணிப்பாளர் |
| 03 | Diploma in English for Professionals (DEP) | மிலோதா நிறுவனம் | 2017 ஏப்ரல் முதல் (01வருடம்)<br>கற்கைநெறியில் பயின்றுகொண்டிருக் கின்றனர் | திரு. டப்ளியு. விமலசேன - பணிப்பாளர்<br>திரு. டப்ளியு.எம்.டீ. விஜேபண்டார - உதவிப் பணிப்பாளர் |
| 04 | Diploma in English for Junior Executives (DEJE) | மிலோதா நிறுவனம் (Miloda) | 2017 ஜுன் முதல் (09 மாதங்கள் ) கற்கைநெறியில் பயின்றுகொண்டிருக் கின்றனர் | திருமதி. எம்.டீ.எஸ்.எஸ். வீரசிங்ஹ |
| 05 | அலுவலகப் பணி உதவியாளர்களினதும் சாரதிகளினதும் மனப்பாங்கு மற்றும் தொழில் அறிவு என்பவற்றை அதிகரித்தல் | SDFL | 2017 ஜுன் 22 - 23 | திரு. ஜே.ஏ.ஜீ.என். ஜயகொடி<br>திரு. ஓ.கே.ரீ. திலங்க |
| 06 | CIGAS Training | மிலோதா நிறுவனம் (Miloda) | 2017.07.11 – 13 | திருமதி. எம்.ஜீ.என்.எஸ். மீகஸ்முல்ல<br>எம்.டப்ளியு.ஏ.எஸ். ஷான்தமாலி<br>திரு.ஜி.எம்.ஏ.எஸ். கலப்பத்தி |
| 07 | Diploma in English for Junior Executives (DEJE) | மிலோதா நிறுவனம் (Miloda) | 2017 ஒக்டோபர் முதல் (09) மாதங்கள்) கற்கை நெறியை பயின்று வருகின்றனர். | திரு.ஜி.எம்.ஏ.எஸ். கலப்பத்தி |

### 4.3.3 2018 ஆம் ஆண்டுக்காக உத்தேச செயற்பாடுகள்

01. தற்போது வெளியிடப்பட்டுள்ள முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கைகளை இற்றைப்படுத்துதல்.

02. தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பணிகளை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் வரை விரிவுபடுத்துதலும் அவற்றின் உள்ளகக் கணக்காய்வை வலுவூட்டுதலும் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்களை வழிநடாத்தும்பொருட்டு தேவையான கொள்கை ரீதியான வரைசட்டகத்தைத் தயாரித்தலும்.

03. அமைச்சுக்கள் மற்றும் விசேட திணைக்களங்களில் நடாத்தப்படுகின்ற கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களக்குரிய அறிக்கைகள் சம்பந்தமான சுருக்கக் குறிப்பொன்றை உரிய விதத்தில் பாராளுமன்ற கணக்குகள் செயற்குழுவுக்கு சமர்ப்பித்தல்.

04. அமைச்சுக்கள் மற்றும் விசேட திணைக்களங்களின் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகளில் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களை ∴ உள்ளககக் கணக்காய்வாளர்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்துதல்.

05. பெறுகை பற்றிய உள்ளகக் கட்டுப்பாட்டை வலுவூட்டும் பொருட்டு கணக்காய்வுச் சுற்றறிக்கையொன்றை வெளியிடுதல்.

06. உள்நாட்டு நிதியிடலை அடிப்படையாகக்கொண்ட கருத்திட்டங்களுக்காக உள்ளக நிர்வாகம் தொடர்பான பரிசீலனைக் குறிப்பொன்றை வெளியிடுதல்.

07. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள் ∴ உள்ளககக் கணக்காய்வாளர்கள் மற்றும் உதவி பணியாட்கள் ஆகியோருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.

    i கணக்காய்வு உத்தியோகத்தருக்கான சான்றிதழ் கற்கைநெறி

    ii பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களுக்காகன வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள். (02 நிகழ்ச்சித்திட்டங்கள்)